ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.வீ. ஜெகதீசன்

ந.க.எண்.21956/2022/பஅ2-2 நாள்:09.11.2022

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை - ஈரோடு மாவட்டம் - 2019-20-ம் ஆண்டிற்கு 20% இடஒதுக்கீடு - இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-2/காசாளர் நிலையில் ஏற்படும் காலிப்பணியிடங்கள் - 20% இடஒதுக்கீட்டில் தேர்வு செய்யப்பட்ட தகுதியான ஊராட்சி செயலர்களுக்கு பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளர்களுக்கு பணியிடம் வழங்கி உத்தரவிடப்பட்டது - பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் - சார்பாக.

பார்வை:
1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் ந.க.எண்.21956/2022/பஅ2, நாள்: 28.07.2022.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), சென்னிமலை கடித ந.க.எண்.1769/2022/அ1, நாள்:07.11.2022.

*******

உத்தரவு:

பார்வை 1-ல் காணும் நடவடிக்கைகளின்படி ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் பணியாற்றி வரும் ஊராட்சி செயலர்களுக்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கென 20 விழுக்காடு இடஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில், பணிமாறுதல் மூலம் பி.சண்முகம், ஊராட்சி செயலர், வெள்ளாங்கோவில் ஊராட்சி என்பவருக்கு பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராக சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் பணியிடம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி தனியர் பணியேற்பு செய்து கொண்ட விபரங்கள் சம்மந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்டுள்ளது.

எனவே உரிய ஆவணங்களின் அடிப்படையில் தனியர் இளநிலை உதவியாளராகப் பணியேற்பு செய்த நாளில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | பெயர்/பதவி/அலுவலகம் | பிறந்த தேதி | இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாள் | இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | பி. சண்முகம்,<br>இளநிலை உதவியாளர்/<br>ஊர்நல அலுவலர் நிலை - 2,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>சென்னிமலை. | 15.06.1978 | 29.07.2022 மு.ப | 29.07.2022 மு.ப |

மேற்காணும் உத்தரவு குறித்து தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள தொடர்புடைய அலுவலகத் தலைவருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சிப்பிரிவு)
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

பெறுதல்

பி. சண்முகம்,
இளநிலை உதவியாளர்/
ஊர்நல அலுவலர் நிலை - 2,
ஊராட்சி ஒன்றியம்,
சென்னிமலை.
(அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), சென்னிமலை.
நகல்: பஅ2 இருப்பு கோப்பிற்கு.